# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/2 - 2017 ජනවාරි මස 16 වැනි සඳුදා - 2017.01.16

*2002/02 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 19 மற்றும் 21 ஆம் பிரிவுகளினால் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் பொறியியல் பீடத்தை தாபிப்பதற்காக கீழே அட்டவணையில் விபரங்கள் காட்டப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்வது அவசியமாகின்றதென காணி எடுத்தற் சட்டத்தின் 49 (அ) பிரிவின் பிரகாரம் இத்தால் கட்டளை பிறப்பிக்கின்றேன்.

லக்ஷ்மன் கிரிஎல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
8 ஆவது மாடி,
மகநெகும மஹமெதுர,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2017, சனவரி 10.

**அட்டவணை**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 587 மத்தேகொட மேற்கு கிராம அலுவலர் பிரிவின் மத்தேகொட கிராமத்தில் 520008 ஆம் இலக்க காணிப் படத்தின் 01 ஆம் தொகுதி, 03 ஆம் இலக்கப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இலக்கம் 108 கொண்ட கெகுனகஹவத்தை என்னும் பெயருடைய 15 ஏக்கர் 01 றூட் 32.9 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணி.

வடக்கு : கித்துலஹேன கிராமத்தின் 520009 ஆம் இலக்க காணிப்படத்தின் தொகுதி 3 ;

தெற்கு : 520008 ஆம் இலக்க காணிப்படத்தின் 2, 3, 4, 6 ஆம் இலக்க காணித்துண்டுகள் மற்றும் அந்த வரைபடத்தின் 02 ஆம் தொகுதி ;

கிழக்கு : வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி (கொட்டாவை தொடக்கம் மத்தேகொட வீதி) ;

மேற்கு : கித்துலஹேன கிராமத்தின் 520029 ஆம் இலக்க காணிப்படத்தின் தொகுதி 07.

02-02